இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 22.01.2024
I.A. 4/2023 in O.S. 141/2019
ம.சா.1 முகமது அஜ்மல் கான்
மனுதாரர் தரப்பு விசாரணை

நான் அகஸ்தீஸ்வரம் தாலுகா வட்டசார் ஆய்வாளராக பணி புரிகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்ற அழைப்பாணை கிடைக்கப் பெற்றதின் பேரில் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ளேன். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் சீனிவாச ராமானுஜர் என்பவருடன் மனு சொத்தை அளவிட நான் 30.07.2022 சென்றிருந்தேன். சா.சா.ஆ 1 எங்கள் அலுவலகத்தில் இருந்து கொடுககப்பட்டது என்றால் வட்டாச்சியர் நகர நில வரித்திட்டம் அலகு 2 அலுவலகத்தில் இருந்து உதவி இயக்குநர் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டதாகும்.

சா.சா.ஆ 1 நில அளவை சட்டத்திற்கு உட்பட்டு வழங்கப்பட்டது என்றால் அலுவல் கடிதங்கள் சட்டத்திற்கு உட்பட்டு வழங்கப்படும்.

எதிர் மனுதாரர் தரப்பு விசாரணை

சா,சா,ஆ 1 ற்கான கோப்பு என்னால் கையாளப்பட வில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ 1 குறித்து விவரங்கள் என்னால் முழுமையாக சொல்ல முடியாது என்றால் சரிதான். தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் படி சா.சா.ஆ 1 எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டதாக சா.சா.ஆ 1ல் துலங்காது என்றால் சரிதான்.

நான் வழங்கிய வரைபடம் குறித்து புல தணிக்கை செய்த போது பிரதிவாதியின் புலஎண் J–6– 32/10 ஆக இருந்தது. மனுதாரர்

எதிர்மனுதாரர் ஆக்கிரமித்ததாக அடையாளம் காட்டிய பகுதி புலஎண் J–6–32/10 தான் என்றால் சரிதான். J–6–32/10 மற்றும் 32/5 புலத்தை நிர்ணயிக்க அதன் பக்கத்தில் உள்ள புல எண்களை அளந்து மேற் சொன்ன புல எண்களின் எல்லையை திட்டப்படுத்தினேன். நான் புல தணிக்கை செய்த போது புல எண் J–6–33/9 என்ற புல எண் எதிர் மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லும் இடத்திற்கு வழங்கப்பட்டு இருந்ததா என்றால் இல்லை.

I.A No3/21 தபசு விவரத்தில் குறிப்பிட்டுள்ள புதிய சர்வே எண் 39/33 மற்றும் 39 த/37 என எங்கள் வருவாய் ஆவணகங்களிலும் புலத்திலும் நான் அளந்த புலங்களுக்கு கொடுக்கப்பட்டு இருந்ததா என்றால் இல்லை. சா.சா.ஆ 1ல் உள்ள புல தணிக்கை அறிக்கையில் J–9/33,37,38 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மனுதாரரையோ பக்கத்து புல உரிமையாளரையோ விசாரித்தாகவோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புலத்தை ஆய்வு செய்ததாகவும் குறிப்பிடவில்லை.

J–6/32/10 மற்றும் J–6/32/5 ற்கான புதிய நகர புல எண் எப்போது வழங்கப்பட்டது என்றால் 01.12.2023 முதல் செட்டில்மெண்ட் பணி முடிந்த பின்பு வழங்கப்பட்டது. அதற்கு முன்பு பழைய புல எண் தான் என்றால் சரிதான். முந்தைய நகர புல எண் எந்த ஆண்டு வழங்கப்பட்டு இருந்தது என்றால் 1973ம் ஆண்டு வழங்கப்பட்டு இருந்தது. அது நகர புல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புல வீஸ்தீரணம் மற்றும் அளவீடு ஆகியவற்றில் மாறுபாடு இருந்தால் உதவி இயக்குநர் நில அளவை அவர்களின் உத்தரவின் பெயரில் தான் அது சரிசெய்யப்படும் என்றால் சரிதான். அவ்வாறான உத்தரவு செயல்முறை ஆணையாக பிறப்பிக்கப்படும் என்றால் சரிதான்.

அவ்வாறு செயல்முறை ஆணை பிறப்பிக்கும் முன்பு சம்பந்தப்பட்ட

தரப்பினர்களுக்கு அறிவிப்பு வழங்கி விசாரணை செய்து கிராம கணக்குகளை சரிபார்த்த பின்பு தான் அந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு அல்லாமல் மேல் எழுத்து என கொடுக்கப்பட்டு இருந்தால் அது சட்டத்திற்கு புறம்பானது என்றால் மேல் எழுத்து என்பது ஒரு மனுவிற்கு கொடுக்கப்படும் பதில் ஆகும். சா.சா.ஆ 1 ல் பக்கம் 3 பார்வையில் ஓமு எனக் குறிப்பிடப்பட்டுள்ள எண் அலுவலக கடிதம் குறித்தது என்றால் சரிதான். அது ஓராண்டு முடிவில் அழிக்கக் கூடிய ஆவணம் ஆகும்.

அந்த அறிக்கை பார்வையில் மனுதாரரின் மனு தேதி மற்றும் மனுதாரர் பெயர் விவரங்கள் இடம் பெறவில்லை என்றால் சரிதான். அந்த அறிக்கை 25.10.2017 ல் வழங்கப்பட்டுள்ளது. பிராது ஆவண எண் 7 மேல் எழுத்து 26.10.2017 அன்று வழங்கப்பட்டதாக உள்ளது. பிராது ஆவண எண் 7ல் உதவி இயக்குநர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். உண்மை நகல் உத்தரவி படி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மேலாளர் கையொப்பம் செய்துள்ளார். நான் புலத்தை அளந்த காலத்தில் புதிய புல எண் நடைமுறைக்கு வரபெறவில்லை என்றால் சரிதான். 01.12.2023 முதல் நடைமுறைக்கு வந்த புதிய புல எண்ணில் தவறுகள் இருந்தால் 3 ஆண்டுகளுக்குள் வருவாய் கோட்டாட்சியர் முன் மனு செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

பிராது ஆவண எண் 5 தோராயப் பட்டாவில் உள்ள புலமும் நான் அளவை செய்த புலமும் ஒன்றா என்றால் பழைய புல எண் J–6–32/5ன் பகுதியாக பிராது ஆவண எண் 5 உள்ளது. பிராது ஆவண எண் 5, 0.10.83 ெஹக்டேருக்கானது. புல எண் J–6–32/5 புலத்திற்கும் பிராது ஆவண எண் 5ல் வரையப்பட்டுள்ள புலத்திற்கு கிழக்கே நேர் கோடாக உள்ளது என்றாலும் எந்த வளைவும் இல்லை என்றாலும் சரிதான். L வடிவமாக

வளைவு வரைபடத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். பழைய புல வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளதை விட பிராது ஆவண எண் 5ல் தெற்குப்பக்கம் கிழ மேல் நீளம் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நீளம் 6.1 மீட்டர் அதிகமாக உள்ளது. பி.சா.ஆ 5ன் படி பட்டா அறுதி செய்யப்பட்டதாக என்னால் சொல்ல முடியாது என்றால் அது தோராயப்பட்டா ஆகும். அறுதி செய்யப்பட்டுள்ளதா என்று என்னால் கூற முடியாது.